**357**—

**ஏற்றுமதி**

*6999—**திரு. ரா. சரத்குமார்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் தேயிலைத் தூள், குருணை டீ, குளோனல் டீ ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் நேரடியாக தேயிலை ஏற்றுமதி ஏதும் தற்போது செய்வதில்லை. ஆயினும், ஏலத்தில் விற்கப்படும் டான்டீ தேயிலைத் தூள், ஏற்றுமதியாளர்களால் பொது ஏலத்தில் வாங்கப்பட்டு, ஓரளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இருப்பினும் நடைமுறைப் பிரச்சினைகளைக் களைந்து, தகுந்த முகவர்கள்மூலம் ஏற்றுமதி செய்வதற்கான வழிமுறைகளைத் தற்போது டான்டீ ஆராய்ந்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

**திரு. ரா. சரத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 358, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*